

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டக்கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகத்தை வளர்த்தெடுத்த, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்களின் மறைவையொட்டி அவரது உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது அமைச்சர் தா.மோ.அன்பரசன், தயாநிதி மாறன் எம்.பி. உள்ளிட்ட கழக முன்னணியினர் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட எடப்பள்ளி ஊராட்சி இந்திரா நகர் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தை தமிழ்நாடு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு,ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, குன்னூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி.சுனிதா நேரு, அரசு துறை அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திண்டுக்கல் - தேனி சாலையில்


# சீவல்சரகு பகுதியில் தொழிலாளர் நல மருத்துவமனை அமைக்கப்படும்!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!

திண்டுக்கல், ஆக.30-

திண்டுக்கல் தேனி சாலையில் சீவல்சரகு பகுதியில் தொழிலாளர் நல மருத்துவமனை அமைக்கப்படும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததோடு திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் ஆத்தூர் தொகுதியில் இரண்டு கல்லூரிகள் மற்றும் நவீன வசதியுடன் கூடிய தொழிலாளர் நல மருத்துவமனை அமைகிறது என அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் நலத்திட்ட பணிகளை துவக்கி வைத்த பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் குடிதண்ணீர்; பிரச்சினைக்குத் நிரந்தர தீர்வுகான ரூ.2ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். வைகை அணையிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர்; கொண்டுவரப்பட்டு வழி



யோர கிராமங்களான நிலக்கோட்டை மற்றும் அருகில் உள்ள பேரூராட்சிகள், சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி அதன் பின்பு திண்டுக்கல் வரை குடிதண்ணீர் கொண்டுவர திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் திண்டுக்கல் மாநகராட்சியின் குடிதண்ணீர்; பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பதோடு தினசரி குடி தண்ணீர் கிடைக்கும் நிலைமை உருவாகும் என்றார். ஆத்தூர் தொகுதியில் உள்ள ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதியில் வசிக்கும் கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி இரண்டு கல்லூரிகள் கொண்டுவரப்பட்டதால் கடந்த 3ஆண்டுகளாக ஒரு ரூபாய் கூட செலவில்லாமல் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்றார்.

நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி, திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் பிலால்உசேன், ஆத்தூர் மார்கிரேட்மேரி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன், ஆத்தூர் தாசில்தார் வடிவேல்முருகன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், திமுக நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் குமரேசன், துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விவே கானந்தன், விடுதலை முருகன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார், துணைச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், பொருளாளர் கருப்பையா,

மாவட்ட பிரதிநிதி தங்கவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், வீரக்கல் காங்கேயன், ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பாறைப்பட்டி முருகன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், பேரூர் கழக செயலாளர் சின்னாளபட்டி மோகன்ராஜ், சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், சின்னாள பட்டி பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதி ராஜா,

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் வீரக்கல் காங்கேயன், ஆத்தூர் ராஜகனேஷ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வீரக்கல் செல்விகாங்கேயன், ஜோதி மயில்சாமி, சிந்தா மணிநாகசுந்தரம், பாப்பாத்தி, நாகவள்ளி,ஊராட்சிமன்ற தலைவர்கள் ஆத்தூர் ஐ.ஜம்ரூத் பேகம், செட்டியபட்டி ராஜா, பஞ்சம்பட்டி பாப்பாத்தி நாகராஜன், அம்பாத்துரை சேகர், பிள்ளை யார் நத்தம் உலகநாதன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அரசு ஒப்பந்தகாரர் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### கழக மூத்த முன்னோடி அன்பில் பொய்யா மொழி 25ஆம் ஆண்டு நினைவுநாள்:

# அன்பில் 25: நலத்திட்டம் - மாணவ மாணவிகளுக்கு நினைவுப் பரிசு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்! மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார்- துரை வைகோ எம்.பி. பங்கேற்பு!

திருவெறும்பூர், ஆக.30-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி அன்பில் தர்மலிங்கத்தின் மகனும் தமிழக முதல்வரின் உயிர் நண்பருமான அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதியில் அன்பில் 25 என்னும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் தந்தை அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி அன்பில் அறக்கட்டளையின் சார்பாக தனியார் பள்ளியில் ஏழை எளிய பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளான தையல் மிஷின் வழங்கப்பட்டது. மேலும் தமிழகத்தில் சிறந்து விளங்கும் மாணவிகளுக்கு நினைவு பரிசு மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது. மேலும் நல்லாசிரியர் மற்றும் சிறப்பாக பணிபுரியும் ஆசிரியர்கள், நூலக ஆசிரியர்கள், ஏழை எளிய மாணவர்களுக்கு உதவும் ஆசிரியர்களுக்கு அன்பில் அறக்கட்டளையின் சார்பாக நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் பாராளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, மண்டல குழு தலைவர் மதிவாணன், முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரிய சாமி மற்றும் அன்பில் அறக்கட்டளையைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

மேலும் இந்த விழாவில் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் உரையாற்றியதாவது:- கலைஞர் கூறியதை போல் நாம் அரசியலுக்கு வந்தோம் அரசியலில் பயணித்தோம் என்று இல்லாமல் நாம் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் நம்மால் மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த அன்பில் அறக்கட்டளை என்றும் இந்த அன்பில் அறக்கட்டளை மூலம் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருவதாகவும் நான் வேலைக்காக அலைந்து திரிந்த பொழுது எனது காலணிகள் தேய்ந்து காணப்படும் அப்பொழுது உழைப்பின் முக்கியத்துவம் என்ன என்பதை நான் அறிந்திருந்தேன் என்றும் எனவே, வேலைக்காக அன்றாடம் பாடுபடும் இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் இந்த அன்பில் அறக்கட்டளை என்றும் இந்த அன்பில் அறக்கட்டளை மூலம் எங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மாணவ மாணவிகளுக்கு நாங்கள் செய்து வருவதாகவும் எனவே பெற்றோர்களிடம் நான் தாழ்மையாக கேட்டு கொள்வது என்னவென்றால் பக்கத்து வீட்டு பையன் படிக்கிறான் நீ எவ்வாறு படிக்கிறாய் என்று தனது பிள்ளையை திட்ட வேண்டாம் என்றும் அவனைத் தாழ்வு மனப்பான்மைக்கு தள்ள வேண்டாம் எனவும் எடுத்துரைத்தார்.

### தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில்

# மருத்துவ இணையியல் - உதவி செவிலியர் பயிற்சி தொடக்கம்!

சென்னை, ஆக.30-

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனையில் 2024-25 ஆண்டிற்கான மருத்துவ இணையியல் படிப்பான இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி (ANM COURSE) தொடங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவியருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவியரும் விண்ணப்பிக்கலாம். உதவி செவிலியர் பயிற்சிக்கு (ANM COURSE) பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு விதிகளின்படி ஒற்றை சாளர முறையில் சமூகம் வாரியாக சுழற்சி முறையில் மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் இயக்குநர் (பொ), தொற்று நோய் மருத்துவமனை, எண்.187, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை 600 081ல் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை அலுவலகத்தில், 02.09.2024 முதல் 09.09.2024 வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் ரூ.50யை பணமாக செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 11.09.2024 மாலை 5.00 மணிக்குள். அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! சென்னை மேற்கு மாவட்ட கழக

# பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



கழக தலைவர் முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் படி நடந்த முடிந்த மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி வரும் 02.09.2024 திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் அமைந்துள்ள எம்.எல்.எம்.திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மரு.நா.எழிலன், பகுதி செயலாளர்கள், மாவட்ட/மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி/வட்டக் கழக நிர்வாகிகள், என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### பொதுமக்கள் பயன்பெறும் வகையில்

# இ-சேவை மையங்களில் சீர்மிகு நடவடிக்கைகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.30-

சென்னை மாவட்ட இசேவை மையங்கள் மூலம் பொதுமக்கள் பயன்பெற்றிட சீர்மிகு நடவடிக்கைகள் குறித்து அரசு வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு :

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஒரு அரசு துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் மூலமாக 530 அரசு இசேவை மையங்கள் மற்றும் 328 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுவருகிறது. அரசு இசேவை மையங்கள் மூலமாக வருவாய் துறை சார்ந்த சான்றிதழ்கள் மற்றும் சமுக நலன் சார்ந்த 170க்கும் மேற்பட்ட சேவைகளை ஆன்லைன் மூலமாக பதிவேற்றம் செய்து பொது மக்களுக்கு சிறப்பாக வழங்கி வருகிறது.

இதேபோல நிரந்த ஆதார் சேர்க்கை மையங்கள் மூலமாக புதிய ஆதார் பதிவுகள் மற்றும் ஆதார் திருத்தங்கள் போன்ற சேவைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாவட்டத்தில் தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், மற்றும் கோட்டம்/வார்டு அலுவலகங்களில் இசேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் சென்னை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு இசேவை மையங்கள் மூலமாக வெளிமுகமை நிறுவனம் மூலம் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வரும் தரவு உள்ளீட்டாளர்கள் மூலமாக பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் குறைபாடுகள் உள்ளதாக அரசின் கவனத்திற்கு வந்தது.

பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவை வழங்க ஏதுவாக, தற்போது சென்னை மாவட்டத்தில் ஒரே இடத்தில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வரும் 44 அரசு இசேவை மையங்களைச் சார்ந்த முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தரவு உள்ளீட்டாளர்களை (Out Sourced Data Entry Operators) சென்னை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கீழ் செயல்படும் அரசு இசேவை மையங்களுக்கு மாற்றம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மதுரவாயல் தெற்கு பகுதி

# 149வது வட்ட கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் த,ரமேஷ் அறிக்கை!

சென்னை, ஆக. 30-

சென்னை மதுரவாயல் தெற்கு பகுதி 149 வது வட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (வெள்ளி கிழமை 30.08.2024) மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது.

இது குறித்து வட்டக் கழக செயலாளர் த.ரமேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை, மதுரவாயல் தெற்கு பகுதி 149 வது வட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (வெள்ளிக் கிழமை 30.08.2024) மாலை 5.30 மணியளவில் ஸ்ரீதேவி குப்பம் பிரதான சாலையில் அமைந்துள்ள எண்.3 பிரண்ட்ஸ் பார்க் ஓட்டலில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும்மான மா.சுப்பிர மணியம் ஆலோசனையின் படி, மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., வழிக்காட்டுதலின் பேரில் 149 வது வட்ட அவைத் தலைவர், எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் மதுரவாயல் தெற்கு பகுதி துணை செயலாளர் வே. மதியழகன் மற்றும் 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.செல்விரமேஷ் எம்.சி., துணை செயலாளர்கள் டி.என். கமலநாதன், எம்.குமார், திருமதி. குப்பு ராஜேந்திரன், பொருளாளர். பி.எஸ். துரைசாமி ஆகியோர் முன்னிலையில் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள் 149 வது வார்டுக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட அணியின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள், கழக செயல் வீரர்கள் என தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி வட்ட கழக செயலாளர் த. ரமேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி சார்பில் ஊர் தோறும் கழக கொடி யேற்றுவோம் நிகழ்ச்சி பேரூராட்சியில் பல்வேறு இடங்களில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. தலைமையில் கழக இளைஞரணியின் அனைத்து மாநாடுகளிலும் வெண் சீருடையுடன் அணிவகுத்தவர். அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவரும் பொதுக் குழு உறுப்பினருமான பா.சிட்டிபாபு, கழக கல்வெட்டு திறந்து வைத்து கழக கொடியை ஏற்றி வைத்தார். உடன் பேரூராட்சி செயலாளர் டி.ஆர்.கே.பாபு, மாநில நெசவாள அணி துணைச் செயலாளர் ஓ.ஏ. நாகலிங்கம், ஒன்றிய செயலாளர் ஜி.ரவீந்திரா, டி.எம். சுகுமாரன், இ.கே.உதயசூரியன், திருமலை லோகநாதன், வி.கே.சுப்பிரமணி, பி.ஜி. சிவகுமார், வாசு, வி.எஸ்.சதீஷ், தங்கானூர் ஆனந்த் உள்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் கலந்தாய்வுக் கூட்டம் கவரைப்பேட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது மகளிர் ஆணைய தலைவர் மாநில மகளிர் அணி இணை செயலாளர் குமரி விஜயகுமார், மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார், கூட்டத்தில் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ் ரமேஷ், பா.செ.குணசேகரன், மு. மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்யவேலு, கா.சு ஜெகதீசன், ஜான் (எ) பொன்னுசாமி, பி.முத்து, அபிராமி குமரவேல் மகளிர் அணி அமைப்பாளர் தேசராணி தேசப்பன், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஜெயலலிதா சசிதரன், உமா காத்தவராயன், வி.சுகன்யா, வி.ரத்தினகுமாரி, பிரபாவதி. அ.காமாட்சி, எ.நாளயினி, பத்மா சீனிவாசன், மு.ஜோதிலட்சுமி சுந்தரி அன்பு, இ.விஜயமாலாபாஸ்கர், எஸ்.ஜெயசித்ரா, இ.புஷ்பராணி, பி அமுதா, எ.கோமளா, ஆர்.சுபாஷினி, த.வெற்றிச்செல்வி, சி.சரண்யா ஏ.கே.சம்பத்குமார், எம் .முரளிதரன் கே.ஆறுமுகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.